Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.348/2022

Dated 21-01-2026
Deposition of witness for : PW 11

பெயர்	:	கார்த்திகேயன்	வயது	:	39
தந்தை பெயர்	:	ஆறுமுகம்	தாலுக்கா	:	பாபநாசம்
கிராமம்	:	நெடுந்தெரு	தொழில்	:	கொத்தனார்

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

Accused 2, 3 present, A1 absent 355 BNSS Petition filed and allowed.

Ld. D **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) **நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். கொத்தனார் தொழில் செய்து வருகிறேன்.**

2) **என்னிடம் காட்டப்படும் கைபற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. முதல் கையெழுத்து என் நண்பர் சாதிக்பாய் என்பவருடையது. அவர்**

தற்போது கும்பகோணம் மேலகாவேரியில் வசித்து வருகிறார்.

3) மேற்படி கையெழுத்தை 21.4.2022 அன்று நானும் இறந்துபோனவரின் மருமகன் சாதிக் என்பவருடன் அய்யம்பேட்டை காவல்நிலையத்திற்கு சென்றேன். அங்கு ஒருவரை விசாரித்து கொண்டிருந்தார்கள். அதற்காக இரண்டு கையெழுத்துக்கள் போட்டேன். எதிரி சூர்யாவின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.5. மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் என்னுடையது. அது அ.சா.ஆ.6 ஆகும்.

4) எனக்கு வேறு எதுவும் தெரியாது.

5) போலிசார்என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியானர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின்படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

1)போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் 21.4.2022 அன்று காலை8.00 மணிக்கு அய்யம்பேட்டை காவல்நிலையம் சென்றபோது சூர்யா என்பவரது ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு செய்வதற்காக சாட்சியாக தமி'ம் அன்சாரி என்பவரையும் என்னையும் இருக்க சொன்னதால் சாட்சியாக இருந்தோம் என்றும்

2) அப்போது சூர்யா ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதன்படி எங்களையும் போலிசாரையும் அழைத்து சென்று அய்யம்பேட்டை பட்டுசாலியதெருவில் அவர் குடியிருக்கும் வீட்டிற்கு காலை 10 மணிக்கு சென்று சூர்யா அடையாளம் காட்டிய இடத்தில் இருந்து தடய பொருளை போலிசார் மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும் அதில் நாங்கள் சாட்சி கையொப்பம் போட்டோம் என்று சொல்லி விட்டு தற்போது எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒம்/-P. வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்